## திருப்பத்துதூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
## முன்னிலை: திரு.அமர் குஷ்வாஹா, இ.ஆ.ப.,

ந.க.பஅ3/12148/2017, நாள்: 19.04.2022

பொருள்: பணியமைப்பு - திருப்பத்தூர் மாவட்டம் - நாட்றம்பள்ளி ஊராட்சி ஒன்றியம் - தும்பேரி ஊராட்சி செயலராக பணிபுரிந்த திரு.எஸ்.விஜயக்குமார் என்பவர் 10.09.2017 அன்று பணியிடை காலமானது – வாரிசுதாரர்/ மனைவி திருமதி.கே.சந்தியா என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர்/ஊர்நல அலுவலர் நிலை-II ஆக தற்காலிகமாக பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது - 24.10.2019 பிற்பகல் பணியில் சேர்ந்தது - விதிகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை:

(1) வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.பஅ3/12148/2017, நாள்: 24.10.2019

(2) அரசாணை (நிலை) எண்: 48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்: 26.02.2021.

(3) இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை அவர்களின் கடிதம் எண் 18355/2021/டி2 நாள்: 18.12.2021.

(4) அரசு கடித எண் 6895/இ3/2021-5 நாள்: 14.12.2021.

<<<<<>>>>>

**ஆணை:**

திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி ஊராட்சி ஒன்றியம் தும்பேரி ஊராட்சி ஒன்றியத்தில் ஊராட்சி செயலராக பணிபுரிந்து 10.09.2017-ம் தேதி அன்று பணியிடை காலமான திரு.எஸ்.விஜயக்குமார் என்பவரின் வாரிசுதாரர்/மனைவி திருமதி.கே.சந்தியா என்பவருக்கு பார்வை (1)ல் கண்ட செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர்/ஊர்நல அலுவலர் நிலை-II ஆக பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டதை தொடர்ந்து, ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தில் 24.10.2019 முற்பகல் ஊர்நல அலுவலர் நிலை–II ஆக பணியில் சேர்ந்து தற்போது மாவட்ட ஆட்சியரகம், வளர்ச்சிப்பிரிவில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

பார்வை (2)ல் காணும் அரசாணையில் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத பணியாளர்களின் பணிநியமனம் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One Level Higher than the appointing authority) கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை வெளியிட்டு, தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை (3)ல் கண்ட ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் கடிதத்துடன் வரப்பெற்ற அரசு கடித எண் 6895/இ3/2021-5 நாள்: 14.12.2021-ல் "இளநிலை உதவியாளர்" பதவிக்கான பணிநியமன

//கனிவுடன் திருப்புக//

அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) என்ற நிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர்களால் பணிநியமனம் வழங்கப்பட்டிருப்பினும், மாவட்ட ஆட்சித்தலைவர்களே இளநிலை உதவியாளர்களுக்கு பணிவரன்முறை செய்திட ஆணை வழங்கலாம் என தெளிவுரை வழங்கப்பட்டுள்ளதின் பேரில், பார்வை (4)ல் கண்ட கடிதத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.கே.சந்தியா என்பவருக்கு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டு, இவர் பணியில் சேர்ந்த நாளான 24.10.2019 பிற்பகல் இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேற்படி பணியாளருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட விவரங்கள் தனியரின் பணிப்பதிவேட்டில் பதியப்பட்டதென சான்றளிக்கப்படுகிறது.

ஜ. ஹரிஹரன் 13/4/22

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
திருப்பத்தூர் மாவட்டம்.

பெறுநர்:

திருமதி.கே.சந்தியா,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சிப்பிரிவு),
திருப்பத்தூர். } உரிய வழிமுறையாக

நகல்: "பஅ3" இருப்பு கோப்பிற்கு.

19/04/22

மே.கு.ந.எண்.பஅ3/12148/2017

மாவட்ட ஆட்சியரகம்
வளர்ச்சி பிரிவு
திருப்பத்தூர்.
நாள்: 20.04.2022

அனுப்பப்படுகிறது.

ஜ. ஹரிஹரன் 20/4/22
மாவட்ட ஆட்சித்தலைவரின்
நேர்முக உதவியாளர் (வ)
திருப்பத்தூர் மாவட்டம்.

பெறுநர்

திருமதி. கே.சந்தியா, 20/04/22
இளநிலை உதவியாளர்,
மாவட்ட ஆட்சியரகம் [வ.பி]
திருப்பத்தூர்.